# கற்பனைப் பாதுகாப்பு

இப்பிரபஞ்சத்தில் நிகழும் நிகழ்வுகளுக்கு பற்பல காரணங்களை ஏற்படுத்தி, அக்காரணங்களை மக்கள் வணங்காதிருக்கும் பொருட்டு அவற்றை சில சமயங்களில் செயலிழக்கவும் செய்து, அக்காரணங்களின் நிகழ்வுகளை அவனது அமுழூாக்க விதிகளோடு இணைத்து, அவற்றில் இருந்து எந்த வொன்றும் அர்த்தமற்றதாகி விடாததாகச் செய்த அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும்.

அல்லாஹ்வின் அன்பர்களாக ஆவதற்கு உலகத்தாருக்கு அருளாக அனுப்பப்பட்ட தூதர் மீது அவனது ஸலாத்தும், ஸலாமும் உண்டாவதாக.

அல்லாஹுத்தஆலா இப்பிரபஞ்சத்தை இல்லாமையில் இருந்து உண்டுபன்னினான். அவனே தனது விருப்பத்திற்கும் மதிநுட்பத்திற்கும் ஏற்ப இப்பிரபஞ்சத்தில் மாறுதல்களை உண்டாக்குகிறான். அவனே படைப்பினங்கள் சிலதின் மீது சிலவற்றின் அவசியத்தை தரப்படுத்தியுமுள்ளான்.

அவற்றில் சிலவற்றை சிலதின் மீது தேவையுடையதாகவுமாக்கியுள்ளான்.

முன்பிருந்த இணைவைப்பாளர்கள், படைத்தல், நிர்வகித்தல், மற்றும் இப்பிரபஞ்சத்தில் முழுமையான ஆதிக்கம் செலுத்தல்

**அனைத்தும் அல்லாஹ்வுக்கு மாத்திரமே சொந்தமானது என்று ஏற்றே இருந்தனர்.**

**அவர்கள் வணங்குபவைதாம் இவ்வுலகை செயல்பட வைக்கின்றன என எண்ணியிருக்கவில்லை. அல்லது அவை தமக்கு நன்மையோ, தீமையோ செய்ய சக்தி பெற்றவை எனவும் நினைத்திருக்கவில்லை. ஆனால் அவை அனைத்திற்கும் ஆற்றல் பெற்றவன் அல்லாஹ் ஒருவன் என்றே நினைத்திருந்தார்கள். இதனையே அல்லாஹ்**

**ثُـــــمَّ إِذَا مَسَّــــــكُمُ الضُّـــــرُّ فَإِلَيْـــــهِ تَجْـــــأَرُونَ (53) ســـــورة النحـــــل**

**பின்னர் ஏதாவது ஒரு துன்பம் உங்களைத் தொட்டு விட்டால் அவனிடமே (அதை நீக்குமாறு பிரலாபித்து) நீங்கள் முறையீடுகிறீர்கள். (அந் நஹ்ல்: 53)**

**இதனாலேயே அல்லாஹ்த்தஆலா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம், அம்மக்களைப் பார்த்து கீழ்வருமாரு கூறச் சொல்கிறான்:-**

**قُلْ أَفَرَأَيْتُم مَّا تَدْعُونَ مِن دُونِ اللَّهِ إِنْ أَرَادَنِيَ اللَّهُ بِضُرٍّ هَلْ هُنَّ كَاشِفَاتُ ضُرِّهِ أَوْ أَرَادَنِي بِرَحْمَةٍ هَلْ هُنَّ مُمْسِكَاتُ رَحْمَتِهِ قُلْ حَسْبِيَ اللَّهُ عَلَيْهِ يَتَوَكَّلُ الْمُتَوَكِّلُونَ (38) سورة الزمر**

**(நபியே!) நீர் சொல்வீராக: அல்லாஹ் எனக்கு ஏதேனும் ஒரு கெடுதி செய்ய நாடினால் நீங்கள் (பிராத்தித்து) அழைக்கும் அல்லாஹ் அல்லாதவை அக்கெடுதியை நீக்கி விட முடியுமா? அல்லது அவன் எனக்கு ரஹ்மத் செய்ய நாடினால், அவனுடைய (அந்த) ரஹ்மத்தை அவை தடுத்து விட**

**முடியுமா? என்பதை நீங்கள் கவனித்தீர்களா? (நபியே!) மேலும் நீர் கூறுவீராக: அல்லாஹ்வே எனக்குப் போதுமானவன், உறுதியாக நம்பிக்கை வைப்போரெல்லாம், அவன் மீதே உறுதியாக நம்பிக்கை கொள்ளல் வேண்டும். (அல் ஜுமர்: 38)**

**இவ்வாறு அம்மக்களிடம் கேட்கப்பட்ட போது அவர்கள் மௌனமாயினர். ஏனெனில் அவர்கள் வணங்குபவற்றைப் பற்றி அவ்வாறு எண்ணியருக்கவில்லை.**

**ஆனால் இன்று சில முஸ்லிம்களோ (அல்லாஹ் அவர்களுக்கு நேர்வழியைக் காட்ட வேண்டும்) ஷைத்தான் அவர்களை தவறான பாதைக்கு இட்டுச்சென்றுள்ளான். தங்களது எதிர்கால விடயங்களை பிடவைத்துண்டுகளிலும், நூல்களிலும், பாதனிகளிலும் அடமானம் வைத்துள்ளார்கள். அவைகள் அவர்களுக்கு நன்மைகளை கொண்டுவந்து கொடுக்கும் என்றோ, தீமைகளை தடுத்து விடும் என்றோ நம்பியுமுள்ளனர். மேலே கூறப்பட்ட (இறைவசனத்திலிருந்து இவர்கள் எவ்வாறானதொரு படிப்பினை பெறப்போகிறார்கள்.) பிடவைத்துண்டுகளும், நூல்களும், பாதனிகளும் ஏதொன்றும் செய்யச் சக்தியற்றவை, அல்லாஹ்தான் எம்மைப் பரிபாலிப்பவன், நமக்கு பாதுகாவலன் என்ற நம்பிக்கை எங்கே இவர்களுக்கு?! இவற்றை விடுத்து அல்லாஹ்வின் மீதான இவர்களது நம்பிக்கை எங்கே போய்விட்டது?!**

**ஏ சகோதரா! யார் அல்லாஹ்வின் மீது தங்களது விடயங்களை பாரம் சாட்டுகிறார்களோ அவர்களுக்கு அல்லாஹ் பாதுகாவலன், பொருப்பாலன் என்பதை மறந்து விட்டார்களா?**

**وَمَـــــن يَتَوَكَّـــــلْ عَلَـــــى اللَّهِ فَهُـــــوَ حَسْـــــبُهُ (3) ســـــورة الطـــــلاق**

**மேலும் எவர், அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு அவனை முற்றிலும் சார்ந்திருக்கிராரோ அவருக்கு அவனே போதுமானவன். (அத்தலாக்: 3)**

**அல்லாஹ்வின் பாதுகாப்பிற்குப் பின்னர் வேறு பாதுகாப்புக்கள் தேவைதானா?! இந்த பிடவைத்துண்டுகளும், நூல்களும், பாதணிகளும் உமக்கு நன்மைகளை கொண்டுவந்து கொடுக்கும் என்றோ, தீமைகளை தடுத்து விடும் என்றோ நம்புகிறீரா?!**

**آللَّهُ خَيْرٌ أَمَّا يُشْرِكُونَ (59) سورة النمل**

**அல்லாஹ் மேலானவனா? அல்லது அவர்கள் (அவனுக்கு) இணையாக்குபவை (மேலானவையா)?**
**(அந் நம்ல்: 59)**

**ஆனால் இப்பொருட்கள் தங்களது அழிவிலிருந்து தம்மை காப்பாற்றிக் கொள்ள முடியுமா? இன்னுமொறு படி தாண்டிச் செல்வதென்றால் அவைகளை நீ கிழித்தால், அல்லது தீயிலிட்டால் அதை தடுத்துக் கொள்ள**

**அவைகளுக்கு ஆற்றலுண்டா? அவ்வாறிருக்க உன்னை எப்படி அவைகள் காப்பாற்ற முடியும்?**

**وَلاَ تَدْعُ مِن دُونِ اللّهِ مَا لاَ يَنفَعُكَ وَلاَ يَضُرُّكَ فَإِن فَعَلْتَ فَإِنَّكَ إِذًا مِّنَ الظَّالِمِينَ (106) وَإِن يَمْسَسْكَ اللّهُ بِضُرٍّ فَلاَ كَاشِفَ لَهُ إِلاَّ هُوَ وَإِن يُرِدْكَ بِخَيْرٍ فَلاَ رَآدَّ لِفَضْلِهِ يُصَيبُ بِهِ مَن يَشَاء مِنْ عِبَادِهِ وَهُوَ الْغَفُورُ الرَّحِيمُ} (107) سورة يونس**

**உமக்கு (எவ்வித) நன்மையையோ, தீமையையோ செய்ய இயலாத அல்லாஹ் அல்லாத எதனையும் நீர் பிராத்திக்க வேண்டாம். (அவ்வாறு) செய்விராயின் நிச்சயமாக நீர் அநியாயக்காரர்களில் ஒருவராகி விடுவீர். அல்லாஹ் ஒரு தீமையை உம்மைத் தீண்டும் படி செய்தால் அதை அவனைத் தவிர (வேறு எவரும்) நீக்க முடியாது, அவன் உமக்கு ஒரு நன்மை செய்ய நாடி விட்டால் அவனது அருளைத் தடுப்பவர் எவருமில்லை, தன் அடியார்களில் அவன் நாடியவருக்கே அதனை அளிக்கிறான் அவன் மிகவும் மன்னிப்பவனாகவும், மிக்க கருணையுடையவனாகவும் உள்ளான்.**

**ஏமனிதா! அல்லாஹ் உம்மை பகுத்தறிவைக்கொண்டும், அவனது தூதரின் போதனை கொண்டும் சிறப்பித்துள்ளானே, அப்படியிருந்தும் நீர் சிந்திக்காதிருப்பதேன்? அவற்றிற்கும் அவையல்லாத வற்றிக்குமிடையில் என்ன தான் வேருபாட்டை நீர் காண்கின்றீர். ஆம் நீர், அவற்றின் மீது முடிச்சுக்கள் போட்டு, மந்திரித்துத் தானே அணிகின்றேன் என்று கூறுவது எனக்கு**

நன்கு புரிகிறது. அப்படியாயின் அல் குர்ஆனும் அஸ்ஸுன்னாவும் ஓதி ஊதுமாறு சொன்ன இடங்களோடு மாத்திரம் சுருக்கிக் கொள்ளாமல் இருப்பது ஏன்? என நான் கேட்கிறேன், அது மாத்திரம் போதுமே! நபியவர்களும் நபித்தோழர்களும் எந்த நேர்வழியில் இருந்தார்களோ அந்த நேர்வழியை மாத்திரம் கடைப்பிடிக்கக்கூடாதா? அதில்தானே (உமக்கான) அனைத்து நலவும் இருக்கிறது!

நான் ஒரு சூனியக் காரனிடம் சென்றேன், அவனல்லவா எனக்கு இவற்றின் மீது முடிச்சுக்கள் இட்டுக்கொடுத்தான் என்று கூறப்போகிறாய் என்றே நான் பயப்படுகிறேன். அல்லாஹ்வின் மீது ஆனையாக அது (உன்னைப்பேராபத்திற்கு இட்டுச்செல்லும்) மிகப்பெரும் அழிவாகும். நிச்சயமாக யார் ஒரு சாஸ்திர காரனிடம், அல்லது ஒரு குறிகாரனிடம் செல்கின்றானோ அவனது நாற்பது நாட்களது தொழுகைகள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா எனவும், யார் அவன் கூறுபவற்றை உண்மை என நம்புகிறானோ அவன் ரஸூல் *ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்* அவர்கள் மீது அருளப்பட்டவற்றை பொய்யாக்கியவனாவான் என்பதையும் மறந்து விட்டாயா?!. (அல்லாஹ் காப்பாற்றுவானாக.)

உம்மைச் சூழவுள்ளவைகளுடன் எவ்வாரு பழகவேண்டுமென்பதை எமது மார்க்கம் எமக்கு தெளிவுபடுத்தியுள்ளது. நபி *ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்* அவர்கள் புதிதான ஒரு ஆடையை அணியும்

போது, அவ்வருளிட்காக அல்லாஹ்வினைப்புகழ்வார்கள். அவற்றின் நலவையும், அது உண்டாக்கப்பட்டதன் நலவையும் அல்லாஹ்விடம் வேண்டுவார்கள். மேலும் அவற்றின் தீங்கையும், அது உண்டாக்கப்பட்டதன் தீங்கையும் விட்டு அல்லாஹ்விடம் பாதுகாப்பு வேண்டுவார்கள். அல்லாஹ்வின் உதவியால் இந்த துஆவுக்குப் பின் பயன் படுத்தப் படும் அப்புதிய பொருள் மூலம் உமக்கு நலவைத் தவிர எவ்வித தீங்கும் ஏற்படாது.

அன்பிற்கினிய சகோதரா! காலை, மாலை துஆக்களில் இருந்து நீர் ஏன் தூரமாகி விட்டாய்? அவை தாம் உமக்கு உண்மையான பாதுகாப்புக்கள், மற்றும் உமக்கு நேரவிருக்கும் துன்பங்களை அல்லாஹ்வின் உதவியால் தடுக்கக் கூடிய பலமான கோட்டைகள் என்பதையும் மறந்து விட்டாயா?!

சகோதரா! நன்கு பயிற்சி பெற்ற அல்லாஹ்வின் படைப்பினங்களான கன்னியமிக்க வானவர்களை நீர் மறந்து விட்டதேன்? அல்லாஹ் அவர்களை உம்பாதுகாப்பிட்காகவே வசப்படுத்தியுள்ளான்.

لَهُ مُعَقِّبَاتٌ مِّن بَيْنِ يَدَيْهِ وَمِنْ خَلْفِهِ يَحْفَظُونَهُ مِنْ أَمْرِ اللَّهِ
سورة الرعد (11)

மனிதனுக்கு முன்னாலும், பின்னாலும் தொடர்ந்து வரக்கூடிய (மலக்குகள்) இருக்கிறார்கள். அல்லாஹ்வின்

**கட்டளையால் அவர்கள் அவனைப் பாதுகாக்கிறார்கள். (அல் ரஃத்:11)**

**இஸ்லாத்தின் ஒவ்வொரு அனுஷ்டானங்களையும் நீர் பின்பற்றி நடக்கும் போது அதுவே உமக்கு பெரும் பாதுகாப்பாக அமைகிறதே.**

**நீர் அதிகாலைத் தொழுகையை கூட்டாக தொழும் போது மாலையாகும் வரை அல்லாஹ்வின் பாதுகாப்பிலும், கண்கானிப்பிலும் அல்லவா இருக்கிறீர். அப்படியாயின் இதை விடவும் உமக்கு வேரு பாதுகாப்புக்கள் தேவை தானா?!**

## நீர் உமது வீட்டை விட்டு வெளியேறும் சமயம்

**باسمِ اللهِ  َتوكلْتُ َعلَي اللهِ,َولاَ َحْولَ وَلاَ قُوةَ إلا ِبالله, اللهُمّ إنّي أَعُوذُ بكِ أنْ أَضِلّ,أو أَضَلّ, أوْ أزِلّ, أوْ أزَلّ, أوْ أظْلِمَ, أوْ أُظْلِمَ, أوْ أجْهَلَ, أوْ يُجْهَلَ عَلَيّ.**

**அல்லாஹ்வின் திருப் பெயர் கொண்டு,,அவனையே நான் முழுவதும் சார்ந்திருக்கிறேன்.அல்லாஹ்வின் உதவி கொண்டே தவிர எதிலிருந்தும் தப்பிப்பதற்கான சக்தி கிடையாது, எதுவும் செய்யவும் முடியாது! இறைவா! நான் வழிதவறிப் போவதில் இருந்தும், அல்லது நான் வழிகெடுக்கப்படுவதில் இருந்தும், அல்லது நான் வழிசறுகுவதில் இருந்தும், அல்லது வழிசறுகச் செய்யப்படுவதில் இருந்தும், அல்லது நான் பிறர் மீது அநீதி இழைப்பதில் இருந்தும் அல்லது பிறர் என் மீது அநீதி இழைப்பதில் இருந்தும், அல்லது நான் பிறரிடம் அறியாத்ததனமாக நடப்பதில் இருந்தும் அல்லது**

**என்னிடம்பிறர் அறியாத்தனமாக நடப்பதில் இருந்தும் (உன்னிடம் பாதுகாவல் தேடுகிறேன்).**
**என்ற துஆவை ஓதிக் கொள்ளும் போது நீர் பாதுகாப்புப்பெற்றீர், கெட்ட விடயங்களில் இருந்து தடுக்கப்பட்டும் விட்டீர், நேர் வழியும் பெற்றீர், ஷைத்தான் தனது தோழர்களைப் பார்த்து பின்வருமாறு கூறி ஒதுங்கி தூரமாகி விடுகிறான். "பாதுகாப்புடைய கெட்ட விடயங்களிலிருந்து தடுக்கப்பட்ட, நேர்வழியும் பெற்ற மனிதனைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்."**

**சகோதரா! இதற்குப் பின்னரும் எதைத் தான் எதிர்பார்க்கிறீர். இது போன்ற நல்வழிகாட்டல்களை விட்டு விட்டு பாதணிகளின் பக்கமும் பிடவைத்துண்டுகளின் பக்கமுமா தஞ்சமடைய நினைக்கிறீர். அவைகளோ உமக்கு இழிவைத்தவிர வேறொன்றையும் கொண்டு வந்து தராது. கீழ் வரும் நபிமொழியை நன்கு கவனமாகக் கேளுங்கள்:**

**ரஸூல் *ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்* அவர்கள் ஒரு மனிதர் தனது கையில் மஞ்சல் நிறத்திலான ஒரு வலயம் அணிந்திருக்கக் கண்டார்கள். அப்போது இது என்ன? என வினவினார்கள். அதற்கு அம்மனிதர், வாஹினா என்ற நோய் காரணமாக அணிந்துள்ளேன் என்றார். அதற்கு ரஸூல் *ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்* அவர்கள், அதனை கழட்டி விடுங்கள், அது உமக்கு பலவீனத்தை அதிகப்படுத்துமே தவிர குறைக்காது. மேலும் அதனை அணிந்திருக்கும் நிலையில் உமக்கு மரணம் எட்டினால்**

**எக்காலத்திற்கும் உம்மால் விமோசனம் பெறமுடியாது என்றார்கள். (ஆதாரம் அஹ்மத்.)**

**அம்மனிதரோ தனக்கு ஏற்பட்டிருந்த நோயைப் பற்றி பயந்து கொண்டிருந்தார். எனவே கற்பனையால் வடிவமைத்துக் கொண்ட இவ்வாரான (பிரயோசனம் அற்ற) ஒரு பாதுகாப்பில் நம்பிக்கை வைத்திருந்தார்.**

**நபி *ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்* அவர்கள் அம்மனிதரை நோக்கி இவைகள் உனது நோயைக் குணப்படுத்தாது. மாற்மாக அது நோயை அதிகரிக்கவே செய்யும் என விளக்கினார்கள்.**

**இவ்வாரான கற்பனைப் பாதுகாப்பினால் நீர் பல நன்மையான விடயங்களை இழக்கின்றீர் என்பதை நீர் அறியவில்லையா? இறுதியில் ரஸீல் *ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்* அவர்கள் கூறிய பின்வரும் எச்சரிக்கையில் நீ விழுந்து விடுவாய். நபியவர்கள் கூறினார்கள்: யார் தாயத்தைக் கட்டுகிறார்களோ அல்லாஹ் அவர்களுக்கு அவரது விடயங்களில் நிறைவைக் கொடுக்க மாட்டான், மேலும் அதன் மூலம் அவருக்கு மனத்திருப்த்தியையும் கொடுக்கமாட்டான் என்றார்கள். (ஆதாரம்:அஹ்மத்)**

**எனவே யார் தாயத்து போன்றவற்றை அணிகின்ராறோ, அவர் ரஸீல் *ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்* அவர்களின் இந்த எச்சரிக்கையினால் சதாகாலமும் அவரது தேவைகளில் தன்னிறைவைக்**

**காணமுடியாத துரதிர்ஷ்டக்காரனாக ஆகிவிடுகின்றான். அப்படியாயின் பிரயோசனம் அற்ற இந்த தாயத்துக்களினால் ஒருமனிதன் என்ன பயன்களை அடையமுடியும். மேலும் சதாகாலமும் மனக்குழப்பங்களுக்கும், கஷ்டங்களுக்கும், பிரச்சினைகளுக்கும் ஆளாகி அமைதியை இழந்து நிம்மதியற்ற நிலையிலும், தினமும் பயந்த சுபாவத்துடனுமே வாழ வேண்டிய நிலைக்கு ஆகிவிடுகின்றார். எந்த நிம்மதிக்காக இதனை அணிகின்றாரோ அந்த நிம்மதி இந்த தாயத்துக்களின் மூலம் கிடைக்கவில்லையாயின் என்ன பயன் இருக்கிறது?.**

**இந்த தாயத்துக்களை அணிகின்றவர் அவற்றின் மூலம் தனக்கு அல்லாஹ்விடமிருந்து கிடைக்கும் பாதுகாப்பையும், கண்காணிப்பையும் இழக்கிறார். இவரோ அல்லாஹ்வின் பாதுகாப்பை உதரித்தள்ளி விட்டு எந்தப் பிரயோசனமும் அற்ற பிடவைத் துண்டுகளிலும், நூல்களிலும், பாதணிகளிலும் நம்பிக்கை வைக்கிறார், இதைவிடவும் அவர் அடையும் நஷ்டம் வேறெதுவாக இருக்கமுடியும். காரணம் நல்லதற்குப் பகரமாக தீயதை தேர்ந்தெடுத்தார்.**

**ரஸூல் *ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்* அவர்கள் கூறினார்கள்: யார் ஏதும் ஒன்றை (தனக்கு பிரயோசனம் அளிக்கும் என்று அல்லது தனக்கு வரக்கூடிய தீங்கை நீக்கும் என்ற) நம்பிக்கையின் அடிப்படையில்**

அணிகின்றாரோ, அவர் அதன் மீதே பாரம் சாட்டப்படுகிறார். என்பதாக.

(ஆதாரம் : அஹ்மத், திர்மிதி)

இது எம்மை அல்லாஹ்விற்கு இணைவைத்த குற்றத்திற்கு இட்டுச் செல்கிறது. அல்லாஹ் காப்பாற்றுவானாக.

மற்றுமொரு அறிவிப்பில் யார் தாயத்தை அணிகின்றாரோ அவர் அல்லாஹ்விற்கு இணை வைத்தவராகின்றார்.

ஹுதைபா *ரழியல்லாஹு அன்ஹு* , அவர்கள் ஒருமனிதர் தனக்கு ஏற்பட்ட காய்ச்சலின் காரணமாக தனது கையில் ஒரு நூலைக் கட்டியிருக்கக் கண்டார்கள். அப்போது அதனை அறுத்தெறிந்து விட்டு

وَمَا يُؤْمِنُ أَكْثَرُهُمْ بِاللّهِ إِلاَّ وَهُم مُّشْرِكُونَ} (106) سورة يوسف

மேலும் அவர்கள் இணைவைப்பவர்களாக இருக்கிற நிலையிலல்லாமல் அவர்களில் பெரும்பாலோர் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொள்வதில்லை.

(யூஸுஃப்: 106)

என்ற இறைவசனத்தை ஓதினார்கள். பின்னர் நீர் இந்நிலையில் மரணித்தால் நான் உம்மீது தொழுகை நடத்தவும் மாட்டேன் என்று எச்சரிக்கையும் செய்தார்கள்.

(ஆதாரம்: இப்னு அபீ ஹாதிம்)

**இது அல்லாஹ்விற்கு இணைவைத்தலின் ஒரு வடிவமாகும். கற்பனையான இந்த நம்பிக்கைகள் தனக்கு நன்மையயோ, தீமையயோ அளிக்கும் என்றோ, அல்லது தனக்கு நேரவிருக்கும் துன்பத்தை துடைக்குமென்றோ, தனக்கு நேர்ந்த துன்பத்தை நீக்குமென்றோ அதனை அணிந்திருப்பவர் நம்புவார் எனில் அவர் படைத்தல், (அண்ட சராசரங்களை) நிர்வகித்தல் என்ற அல்லாஹ்வுக்குச்சொந்தமான அம்சத்தில் இன்னுமொன்றை இணையாக நம்புகிறார் என்ற காரணத்தினால் அல்லாஹ்வின் இறைமையோடு கூட்டுச்சேர்த்த பெரும் இணைவைப்பைச்செய்த குற்றத்திற்கு ஆலாகிறார்.**

**மேலும் அச்செயல்கள் தானாகவே (அல்லாஹ்வின் உதவியின்றி) நன்மைகளை ஈட்டித்தரும் என உள்ளத்தால் நம்பிக்கை வைப்பது வணக்க வழிபாடுகளில் அல்லாவுக்கு இணைவைப்பதாக கருதப்படும். ஆனால் அல்லாஹ் ஒருவன் மாத்திரமே ஆட்சியாளன், அதிகாரமுள்ளவன், நன்மையளிப்பவன், தீமையளிப்பவன், பாதுகாப்பவன், துன்பத்தை நீக்குபவன் என விசுவாசம் கொள்வதுடன் இவைகளை வெறுமனே காரணங்களுக்காத்தான் செய்கிறோம் என்று நம்பினால் அது சிறிய இணையாகக் கருதப்படும்.**

**அது விபச்சாரம் புரிதல், மதுபாணம் அருந்துதல், கொலைசெய்தல் போன்ற <u>பெரும் பாவங்களை</u> விடவும்**

**கொடியதே! அத்தோடு இந்த தாயத்துக்கள் மார்க்கத்தோடு சம்பந்தபட்ட கராணிகளும் அல்ல. குறைந்தது நடைமுறையில் மனிதர்கள் பரீட்சித்துப் பார்க்கப் பயன்படுத்தும் மருந்து வகைகளில் உள்ளதாகக் கூட கருதப்படுவதில்லை. அப்படியாயின் ஷைத்தான் அதை அணிபவர்களது மார்க்கத்துடனும், பகுத்தறிவுடனுமே விளையாடுவதைத்தவிர வேறொன்றுமில்லை**

**மேலே கூறப்பட்ட நபிமொழியில் தாயத்து போன்ற கற்பனைப் பாதுகாப்புக்களை கண்மூடித்தனமாகப் பின்பற்றுவதால் ரஸூல் *ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்* அவர்கள் (மறுமை நாளில்) எமது விடயங்களில் எம்மை விட்டும் பொருப்பற்றவர்களாயிருப்பார்கள் என்பது எமக்கு திருப்த்தியாக இருக்கிறதா.?!! இவ்வாறான தாயத்துக்களால் எமக்கு கைசேதத்தையும், கெடுதியையும் தவிர வேரொன்றுமில்லை.**

**இவ்வாரான செயல்களை ரஸூல் *ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்* அவர்கள் மிகவும் வண்மையாகக் கண்டித்துள்ளார்கள். மேலும் அக்காலத்தில் போக்குவருத்துச் சாதகங்களாக பயன்படுத்தப்பட்ட மிருகங்களின் கழுத்துக்களில் பாதுகாப்புக் கருதி தொங்கவிடப்பட்டவைகளை கழுட்டியெறியும் படி ஏவினார்கள்.**

**இதை பின்வரும் நபிமொழி தொளிவுபடுத்துகிறது. எந்த ஒட்டகத்தின் கழுத்தில் தாயத்து**

தொங்கவிடப்பட்டுள்ளதோ அவற்றை கழட்டி எறிந்து விட வேண்டும் எனக் கூறினார்கள்.(ஆதாரம் புஹாரி முஸ்லிம்)

எனவே இணைவைத்தலில் இட்டுச்செல்லக் கூடியவற்றிலிருந்து தூரமாகி நடப்பதோடு, அவ்வாரான செயலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு அதன் கெடுதிகளை நல்ல முறையில் விளக்கி அவர்களையும் அதனை விட்டும் தவிர்ந்து வாழுமாரும் எச்சரிக்கை செய்வது எமது கடமையாகும். அதேவேளை எமது வாகணங்களிலும், கூலி வண்டிகளிலும் குழந்தைகளின் கழுத்துகளிலும் இடப்பட்டிருக்கும் இவ்வாறான தாயத்துக்களை கழட்டி எறியவும் வேண்டும்.

அல்லா அல்லாதவைகளுடன் உளத்தொடர்பை ஏற்படுத்தி அவைகள் மூலமாக நன்மையை நாடுவதோ அல்லது தீமையில் இருந்து பாதுகாப்புத் தேடுவதோ ஒரு வேடிக்கையாகும். இதுவே மனிதன் அடையும் மிகப் பெரிய துர்ப்பாக்கியமாகும்.

தொடர்பு வைப்பதென்பது மூன்று வகையாக அமையும் 1- உள்ளத்தால் தொடர்பு வைத்தல். 2-செயல்கள் மூலம் தொடர்பு வைத்தல். 3-அவையிரண்டின் மூலமும் தொடர்பு வைத்தல். இவ் இருதியானதே மிகவும் அபாயமானது, ஆனால் சந்தேகத்துக்கிடமின்றி இவை ஒவ்வொன்றும் மிகப் பெரிய ஆபத்தாகும்.

அல்லாஹ` த்தலாக சில காரியங்களை செய்வதற்கு சில காரணங்களை ஏற்படுத்தியுள்ளான். அக்காரணங்களில் மாத்திரம் முழு நம்பிக்கை வைக்காது அக்காரணங்களை

**செய்வதுடன் அதன் பயன் கிடைக்க வேண்டுமென்று அவைகளை உருவாக்கிய வல்லமையுள்ள அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை வைக்க வேண்டும்.அக்காரணங்கள் எவ்வளவு பயனுள்ளதாக, வலுவுள்ளதாக இருந்த போதிலும் அவைகள் விதியெனும் நியதிக் குட்பட்டதாகவே உள்ளது. விதியை விட்டும் அனுவளவும் அசைய முடியாது.**

**அப்படியாயின் எமது கஷ்டங்களை நீக்கவும், எமது துன்பங்களைப் போக்கவும், எமது தேவைகளை நிறைவேற்றி எம்மீது கருணை கொள்ளவும் அவற்றின் காரண கர்த்தாவான அல்லாஹ்விடம் எமது தேவைகளை முறையிடாதிருப்பதேன்?**

**யார் அல்லாஹ்வோடுள்ள தொடர்பை பலப்படுத்தி தனது எல்லாத் தேவைகளையும் அவனிடமே மன்றாடி கேட்கிறாரோ, அவனுக்கு அல்லாஹ் போதுமானவனாக இருப்பான், அவனது எல்லா கஷ்டங்களையும் இலகுபடுத்திக்கொடுப்பான், அவனுக்கு எதுவெல்லாம் தூரமானதாக இருக்கிறதோ அவைஅனைத்தையும் சமீபமாக்கிக் கொடுப்பான்.**

**தன்னை அல்லாஹ் அல்லாதவற்றிடம் ஒப்படைப்பவன் துரதிர்ஷ்டவாலியே. ஏனெனில் அவன் தன்னையும், தனது விடயங்களையும் எதற்குமே சக்தியற்றவற்றின் மீது நம்பிக்கை கொள்ளச் செய்வதன் மூலம் அல்லாஹ் அவனுக்கு இழிவையே கொடுக்கிறான்.**

**எனவே யார் ஒருவனை இவ்வாறான ஷிர்க்கான விடயங்களில் இருந்து காப்பாற்றுகின்றாரோ அவருக்கு மகத்தான நற்கூலிகள் கிடைக்கும். யார் இதன் ஆரம்ப வெளிப்பாடுகளையாவது களைய முற்படுகின்றாரோ அவருக்கும் மகத்தான நற்கூலிகள் கிடைக்கும். ஸஈத் இப்னு ஜுபைர் *ரஹ்மதுல்லாஹ்* கூறுகிறார்கள்: யார் ஒரு மனிதனிடத்திலிருந்து தாயத்தை கழுட்டி எறிகின்றாறோ அவருக்கு ஓர் அடிமையை விடுதலை செய்த நன்மை கிடைக்குமென்றார்களே, அது ஒவ்வொருவருக்கும் கிடைக்க வேண்டுமென எதிர்பார்க்கிறோம்.**

**இறுதியாக**

**قُلْ يَا أَيُّهَا النَّاسُ قَدْ جَاءكُمُ الْحَقُّ مِن رَّبِّكُمْ فَمَنِ اهْتَدَى فَإِنَّمَا يَهْتَدِي لِنَفْسِهِ وَمَن ضَلَّ فَإِنَّمَا يَضِلُّ عَلَيْهَا وَمَا أَنَاْ عَلَيْكُم بِوَكِيلٍ} (108) سورة يونس**

**(நபியே!) நீர் கூறுவீராக: மனிதர்களே! நிச்சயமாக உங்கள் இறைவனிடம் இருந்து உங்களுக்கு சத்திய (வேதம்) வந்து விட்டது, எனவே யார் (அதைப் பின்பற்றி) நேரான வழியில் செல்கிறாரோ அவர் தம் நன்மைக்காகவே அந்நேர்வழியில் செல்கிறார், எவர் (அதை ஏற்க மறுத்து) வழி தவரினாரோ, நிச்சயமாக அவர் தமக்குக் கேடான வழியிலே செல்கிறார், நான் (உங்களைக் கட்டாயப் படுத்தி) உங்கள் காரியங்களை நிர்வகிக்க அதிகாரம் பெற்றவனல்ல.**
**என்ற இறைவசனத்தைக் கூறி முடிக்கிறேன்.**

**அல்லாஹ்விற்கே எல்லாப் புகழும். அவனது தூதர் மீது ஸலாம் உண்டாவதாக.**

**நன்றி : அஷ்ஷெய்க்: முஹம்மத் இப்னு சுலைமான் அல் முபத்தா (ரியாத்)**

***தமிழில்: மவ்லவி முஹம்மத் இம்ரான் (அபூ அப்துல் பாஸித்)***

***மீள் பார்வை: மவ்லவி ரஷாத் சஹவி***